திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய காலத்தில் விசாரணையை நடத்தாமல், விசாரணையை நீட்டிப்பதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அந்த உதவித் தொகை சீக்கிரம் கிடைக்கவில்லை. ஆகவே, இனிமேலாவது குறுகிய காலத்தில் விசாரணையை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் உதவித் தொகை கிடைக்க ஆவன செய்ய இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணையை விரைவுபடுத்துவது பற்றி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் விசாரணையை விரைவாக நடத்துவதன் காரணமாக விதி முறைக்கு மாறாக காரியங்கள் நடைபெறாமலும் பார்க்க வேண்டியிருக்கிறது. அதையும் நாம் கவனிக்க வேண்டும். விசாரணையை விரைவுபடுத்த வேண்டும் என்பதில் அரசுக்கு எந்தச் சங்கடமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் பழைய கல்வெட்டு, ஓலைச்சுவடிகள்

134—(* வினா எண் 3234) திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் பண்டைய கல்வெட்டுகளும் ஓலைச் சுவடிகளும் மைசூரில் உள்ள எபி இராபிக் அலுவலகத்தில் உள்ளது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவைகளை தமிழ்நாட்டுக்கே கொண்டு வந்து பிரசுரம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கல்வெட்டுக்கள் உள்ளதை அரசு அறியும். அங்கு ஓலைச் சுவடிகளை சேகரித்து வைப்பதில்லை. மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் மைசூர் தலைமைக் கல்வெட்டாய்வாளர் அலுவலகத்தில் படியெடுத்து வைக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுப் படிகளைப்

1987 மார்ச் 23]

(PAPER INSCRIPTIONS) பெற்று அவைகளை அச்சாக்கி நூலாக வெளியிட, பல ஆண்டுகளுக்கு முன் அரசு நடவடிக்கை எடுத்து, இது சம்பந்தமாகப் பல ஆண்டுகள் தொடர்ந்து மத்திய அரசினுடைய கல்வெட்டுப் பிரிவைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கல்வெட்டுப் படிகளைப் படித்து, நூலாக வெளியிடத் தவணை முறையில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

கிராமப்புற மனமகிழ் மன்றங்கள்

135—(*வினா எண் 7937) **திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் பல இடங்களில் 'மனமகிழ் மன்றம்' என்ற பெயரால் சூதாட்டக்கூடமாக நடைபெற்று வருவதைக் கருத்திற்கொண்டு அவைகளுக்கான அனுமதியினை ரத்து செய்திடும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 10-40)

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே மனமகிழ் மன்றம் துவக்குவதனுடைய நோக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமகிழ் மன்றம் யார் துவக்க விரும்புகிறார்களோ அவர்களே அந்த விதிகளைச் சொல்ல வேண்டும். முக்கியமாக மனமகிழ்ச்சி, கல்வி, போன்றவற்றின் அபிவிருத்திக்காக இந்த மனமகிழ் மன்றங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனமகிழ் மன்றம் என்கின்ற பெயராலே பல இடங்களிலே சூதாட்டங்கள் பல ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்றன, சட்டத்தை ஏமாற்றி. எனவே, அதைக் கருத்திற்